இன்றைய செய்தி நாளைய வரலாறு




கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 15 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 08 – செவ்வாய்க்கிழமை 25 ஆகஸ்ட் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 15 : Thiruvalluvar Year - 2057 - Aavani 08 - Tuesday 25 August 2026 - Chennai 12 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.08.2026) காலை, திருவான்மியூர் – ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டர் திருமண மண்டபத்தில் – இயக்குநர் அமிர்தம் – திருமதி வசந்தா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், டாக்டர் பெ. சதீஸ் குமார் – டாக்டர் ச.கலைச்செல்வி ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் ச.இலக்கியா – ஓசூர் கே.கும்மிரெட்டி – எஸ்.ரூபா ஆகியோரின் புதல்வர் டாக்டர் கு.கிரிதரா ஆகியோரின் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்தினார். கழக இளைஞர் அணிச் செயலாளரும் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவிற்கு முன்னிலை வகித்தார். திருமதி துர்கா ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், கவிப்பேரரசு வைரமுத்து, மு.க.தமிழரசு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் மேடையில் உள்ளார்கள்.

## இலட்சக்கணக்கான மக்கள் செய்த தவறு, கோடிக்கணக்கான மக்களை இன்றைக்குத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது! இந்த நிலை மாற வேண்டும்!

# வீடுகள்தோறும் பட்டதாரிகளை உருவாக்கியது திராவிட இயக்கம்!

## இயக்குநர் அமிர்தம் இல்ல மணவிழாவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 25 -**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை, சென்னை திருவான்மியூரில், இயக்குநர் அமிர்தம் அவர்களின் பேத்தி திருமண விழாவைத் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில், "இலட்சக்கணக்கான மக்கள் செய்த தவறு, கோடிக்கணக்கான மக்களை இன்றைக்குத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது! இந்த நிலை மாற வேண்டும்!" என்றும், "வீடுகள்தோறும் பட்டதாரிகளை உருவாக்கியது திராவிட இயக்கம்!" என்றும் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24-08-2026) காலை, சென்னையில், இயக்குநர் அமிர்தம் அவர்கள் இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

நம்முடைய பெருமதிப்பிற்குரிய, 'அண்ணன்' என்று அழைப்பது உண்டு; ஆனால் முறைப்படி பார்த்தால் நான் அவரை 'அத்தான்' என்றுதான் அழைக்க வேண்டும். ஆனால் நான் மட்டுமல்ல, என்னுடைய அண்ணன், தம்பி யாராக இருந்தாலும், முரசொலி மாறன் அவர்களாக இருந்தாலும், முரசொலி செல்வம் அவர்களாக இருந்தாலும், நம்முடைய இயக்குநர் அமிர்தம் அவர்களாக இருந்தாலும், அவர்களை எல்லாம் நாங்கள் "அண்ணன், அண்ணன்" என்று அழைத்துப் பழக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட உரிமையோடு, உறவோடு இருக்கக்கூடியவர்கள் அவர்கள்.

> **"அண்ணன் அமிர்தம் அவர்கள் ரொம்பக் கண்டிப்பானவர். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், என்னைக் கன்னத்திலே அடித்திருக்கிறார்! நான் பலமுறை அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அளவுக்குக் கண்டிப்பானவர்; அடித்து வளர்த்தவர் அமிர்தம் அவர்கள். அப்படிப்பட்டவருடைய பேத்திக்கு நடைபெறக்கூடிய மணவிழாவில் கலந்துகொள்ளும் நேரத்தில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்."**



இன்று அண்ணன் அமிர்தம், அக்கா திருமதி வசந்தா ஆகியோருடைய பேத்தியும் டாக்டர் சதீஷ்குமார் - டாக்டர் கலைச்செல்வி ஆகியோரின் மகளுமான மணமகள் டாக்டர் இலக்கியாவிற்கும்; (நினைவில் வாழக்கூடிய) கோபாலன் - நஞ்சம்மா ஆகியோரின் பேரனும், கும்மி - திருமதி ரூபா ஆகியோரின் மகனுமான மணமகன் டாக்டர் கிரிதராவிற்கும் மணவிழா நிகழ்ச்சி நிறைவேறியிருக்கிறது.

இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

### ஒட்டோடும் உறவோடும் வாழும், "கோபாலபுரத்துக் குடும்பம்"

கலைஞருடைய குடும்பம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இது கலைஞருடைய குடும்பம் மட்டுமல்ல, ஒரு 'கோபாலபுரத்தினுடைய குடும்பம்' என்றே

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

## இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளைத் தகர்க்கும் பேரிடி! பரந்தூர் விமான நிலையத்தைக் கைவிடுவது;

# தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் படுகுழியில் தள்ளிவிடும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, ஆக. 25 -**

**"பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படுகிறது!" என முதலமைச்சர் விஜய், நேற்று சட்டப்பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து வலைதளத்தில் பதிவிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பரந்தூர் விமான நிலையத்தைக் கைவிடுவது, தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் படுகுழியில் தள்ளிவிடும்!" என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

பரந்தூர் பன்னாட்டு விமான நிலையத் திட்டத்தைக் கைவிடுவதாக தமிழ்நாடு முதலமைச்சர் இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பு மாநில வளர்ச்சியைப் பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிடும். அற்ப அரசியல் காரணங்களுக்காகத் தமிழ்நாட்டின் நலனை அடகு வைக்கக் கூடாது.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை விதி எண்.110இன்கீழ் அறிவித்துவிட்டு விவாதத்துக்கோ கருத்து தெரிவிக்கவோகூட இடமில்லாமல் செய்திருப்பது சரியல்ல.

மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி, ஆட்டோமொபைல் என சகல துறைகளிலும் முதலிடம் வகிக்கும் தமிழ்நாட்டின் தலைநகரில் உலகத் தரத்திலான ஒரு விமான நிலையம் அமைவது மிக மிக அவசியமானது. அதை வேண்டாம் என மறுத்திருப்பது மாற்றமல்ல; பெருத்த ஏமாற்றம்!

சாத்தியமுள்ள அனைத்து மாற்று இடங்களையும் கவனமாகப் பரிசீலித்த பின்புதான் பரந்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்தலும் நிறைவடையும் தருவாயில் உள்ளது. பலகட்டப் பணிகள், ஒப்புதல்கள் நிறைவடைந்த நிலையில் ஆட்சிக்கு வந்ததும் கட்டுமானம் விரைந்து தொடங்கப்பட பல திட்டங்களை நாங்கள் வைத்திருந்தோம்.

தற்போது அமைந்துள்ள புதிய அரசு மீண்டும் வேறு இடத்தைத் தேர்வு செய்து பணிகள் தொடங்குமுன், தமிழ்நாட்டின் வளர்ச்சியே மொத்தமாக DROP ஆகிவிடும்.

முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக "திராவிட மாடல்" ஆட்சியில் இருந்த தமிழ்நாடு கடைசி இடத்துக்குத் தள்ளப்படும். முதலமைச்சரின் அறிவிப்பு நம் போட்டி மாநிலங்களுக்கு அடித்த ஜாக்பாட்!

தொழில் வளர்ச்சி இல்லாமல் ஒரு ட்ரில்லியன் டாலர், ஒன்றரை டரில்லியன் டாலர் என்ற பொருளாதார வளர்ச்சி இலக்குகள் சாத்தியமே இல்லை. எந்த யோசனையும் ஆலோசனைகளும் இல்லாமல் த.வெ.க. அரசு எடுத்திருக்கும் இந்த முடிவு தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளைத் தகர்க்கும் பேரிடி!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.